# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 98 / 2022**

திரு மா.த.கேசவன்,
5/1/3, எப்.எப். ரோடு,
விருதுநகர் – 626 001.

………மேல்முறையீட்டாளர்
(திரு மா.த.கேசவன்)

எதிர்

உதவி மின்பொறியாளர்/ /கூமாபட்டி ,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கூமாபட்டி.

...... எதிர்மனுதாரர்
(திரு C. கோபால்சாமி, உதவி மின்பொறியாளர்/ /கூமாபட்டி)

**மனு பெறப்பட்ட நாள்: 25-11-2022**

**கேட்புரை நாள்: 08-02-2023**

**ஆணை நாள்: 13-02-2023**

25.11.2022 அன்று பெறப்பட்ட திரு மா.த.கேசவன், 5/1/3, எப்.எப். ரோடு, விருதுநகர் – 626 001 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 98/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.02.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

# ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டிற்கு வீதப்பட்டி மாற்றம் பற்றி விசாரணை செய்து வீதப்பட்டி மாற்றி இதுவரை தான் செலுத்திய தண்டத் தொகையையும் திரும்ப தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டிற்கு வீட்டு உபயோக மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் களஆய்வு செய்து மேல்முறையீட்டாளருக்கு வணிக பயன்பாட்டிற்கான மின் இணைப்பு எதிர்மனுதாரரால் வழங்கப்பட்டுள்ளது.

2.3 எனவே, தன்னுடைய வீட்டிற்கு வீட்டு உபயோக வீதப்பட்டிக்கு மாற்றி தருமாறு விருதுநகர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், விருதுநகர் மின்பகிர்மான வட்டம், 20.10.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு:**

விருதுநகர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 20.10.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"முடிவுரை :*
> *மனுதாரர் தனக்குச் சொந்தமான தோட்டத்தில் கட்டியிருக்கும் குடியிருப்புக்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண்: 276-020-375 ஐ வீதப்பட்டி எண் V ல் இருந்து வீதப்பட்டி எண் IA ற்கு மாற்றம் செய்து தர உத்தரவிட்டு மனு எண்: 36/2022 இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.02.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு மா.த.கேசவன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு C. கோபால்சாமி, உதவி மின்பொறியாளர்/ /கூமாபட்டி, விருதுநகர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்ட கொடிக்குளம் கிராமத்தில் தனக்கு பட்டா எண்.3591ன் படி சொந்தமான புல எண்.144/5ல் கட்டியுள்ள குடியிருப்பு வீட்டுக்கு கடந்த 15.8.2021 வீட்டு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் இணையம் மூலம் தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பித்து இருந்ததாகவும் அந்த ஆவணங்களின் நகலையும் கூமாபட்டி இளநிலை பொறியாளர் வசம் சமர்ப்பித்து இருந்ததாகவும், இளநிலை பொறியாளர் அந்த ஆவணங்களை சரிபார்த்து கடந்த 25.8.2021 அன்று அந்த வீட்டை கள ஆய்வு செய்து வீட்டு வீதப்பட்டியில் இணைப்பு வழங்குவதாக குறுஞ்செய்தி அனுப்பி அன்றே இணைப்பு எண். 07276020375 இணைப்பு வழங்கியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 ஆனால் மின் இணைப்பில் 100 யூனிட்டுக்கும் குறைவான உபயோகத்திற்கு ரூ.550/– ரூபாய் பில் வந்தது. இது விபரமாக தான் 15.11.2021 அன்று கூமாப்பட்டி இளநிலை பொறியாளரை நேரில் சந்தித்து விபரம் கேட்டதாகவும், அவர் மேல்முறையீட்டாளருக்கு வணிக வீதபட்டியலில் இணைப்பு வழங்கியிருப்பதாகவும், இந்த பில்லுக்கு பணம் செலுத்திய பின்பு வீதப்பட்டி மாற்றி தருவதாக இளநிலை பொறியாளரை கூறியதால் தான் அன்றே அதே அலுவலகத்தில் மைி பில்லுக்கு பணம் செலுத்தியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இரண்டு மாதம் கழித்து வீதப்பட்டியில் மாற்றம் செய்யாததால் அடுத்த பில்லும் 100 யூனிட்டுக்கும் குறைவான உபயோகத்திற்கு ரூ.392/– வந்ததால் இத்தகவலை 11.01.2022 அன்று பதிவு தபால் மூலம் இளநிலை பொறியாளருக்கு தெரிவித்து வீதப்பட்டி மாற்றம் செய்து தரும்படி கேட்டதாகவும், பின்பு இது விசயமாக 22.02.2022 அன்று பதிவு தபாலில் நினைவூட்டுக் கடிதம் எழுதியிருந்ததாகவும், மைி இரண்டு கடிதங்களுக்கும் எவ்வித பதிலோ, நடவடிக்கையோ இல்லாததால் கடந்த 25.02.2022 அன்று இணையம் மூலம் 434181 நிர் புகாராக புகார் செய்து இருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இதன் பின்பு கடந்த 28.02.2022 அன்று வீதப்பட்டி மாற்ற விண்ணப்பம், மற்றும் தீர்வை ரசீது போன்ற ஆவணங்களை சமர்ப்பித்து வீதப்பட்டி மாற்ற கட்டணம் செலுத்தும்பட்சத்தில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டிருந்ததாகவும், இந்த கடிதத்திற்கு 02.03.2022 அன்றைய கடிதத்தில் மின்இணைப்புக்கு தேவையான ஆவணங்கள் அனைத்தும் தன்னுடைய 15.08.2021 விண்ணப்பத்தில் இணைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் அவர்களின் தவறுக்கு தன்னை கட்டணம் செலுத்த சொல்வது எந்த வகையிலும் ஏற்புடையது இல்லை என்பதால் எவ்வித சுணக்கமும் இன்றி வீதப்பட்டி மாற்றி தரும்படி வேண்டியிருததாகவும், இந்த கடிதத்திற்கு 09.03.2022 தேதியில் அவர் கள ஆய்வு செய்யும் பொழுது வணிக பயன்பாட்டில் இருந்ததால் வணிக வீதப்பட்டி விதித்ததாக சுமார் ஆறுமாத காலத்திற்கு பிறகு பதில் கடிதம் எழுதுவதாக கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேற்கூறிய கடிதத்திற்கு 12.03.2022 அன்று தனது கடிதத்தில் கிழக்கண்ட விபரம் கேட்டிருந்ததாகவும், மைி நடுகாட்டில் உள்ள வீட்டில் எந்தவிதமான வணிக

பயன்பாடு நடைபெற்றது, பிறகு ஏன் 25.08.2021 அன்று 12.38 மணிக்கு வீட்டு மின்உபயோகம் என்று குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு, 25.08.2021 அன்று 12.46 மணிக்கு மின் இணைப்பு வழங்கியதாக குறுஞ்செய்தியும் அனுப்பியதாகவும், இந்த 8 நிமிட காலத்திற்குள் வீட்டு உபயோகம், வணிக உபயோகமாக மாறிய விபரத்தையும் கேட்டு எழுதிய கடிதத்திற்கு நாளது தேதி வரை எந்தவித பதிலோ, நடவடிக்கையோ இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 எனவே தன்னுடைய வீதப்பட்டி மாற்றம் பற்றி விசாரணை செய்து வீதப்பட்டி மாற்றி இதுவரை தான் செலுத்திய தண்டத் தொகையையும் திரும்ப தருமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டாளர் இணையதளம் மூலம் வீட்டு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் பதிவு (பதிவு எண். 20007276082135O) செய்திருந்ததாகவும், அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் இடத்தை கள ஆய்வு செய்யப்பட்ட பொழுது அந்த இடமானது பிளவக்கல் மெயின் ரோட்டிலிருந்து சுமார் 600 மீட்டர் தொலைவில் காட்டுக்குள் அமைந்துள்ளதாகவும், அந்த இடத்தில் விவசாய கிணறு ஒட்டி சுவர் எழுப்பப்பட்டு மேலும் ஒரு மோட்டர் அறை மாட்டுத்தொழுவம் மற்றும் தகர கொட்டகை (சுமார் 150 சதுர அடி) இருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேல்முறையீட்டாளர் இடமானது சா.கொடிக்குளம் பேரூராட்சி எல்லைக்கு உட்பட்டதாகவும் பேரூராட்சி அலுவலகத்தில் குடியிருப்புக்கான முறையான அனுமதி (plan approval) பெறப்படவில்லையெனவும், மேலும் வீட்டுப் பயன்பாட்டிற்கான எந்த ஒரு முறையான அமைப்பும் அந்த கட்டிடத்தில் இல்லை, வணிகப் பயன்பாட்டில் இருப்பது போல் இருந்ததாகவும், அதன் பின்னர் கூமாப்பட்டி உதவி மின் பொறியாளர் அலுவலக LT Billing server ஆய்வு அறிக்கை பதிவிடும் போது வீதப்பட்டி IA வில் பதிவு செய்திருந்ததை வீதப்பட்டி V க்கு மாற்றம் செய்யப்பட்டு, புதிய மின் இணைப்பு (07.276.020.375) Assign செய்யப்பட்டதாகவும், இது குறித்து கூமாப்பட்டி பிரிவு அலுவலகத்திலிருந்து மேல்முறையீட்டாளருக்கு தபால் அனுப்பிய பின்னரே வணிக மின் இணைப்புக்கு மாற்றப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 அதன் பிறகு மேல்முறையீட்டாளர் வணிக பயன்பாட்டில் மின் இணைப்பு எதன் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று தபால் அனுப்பியதாகவும், மீண்டும் கள ஆய்வு செய்யப்பட்ட பொழுது மேல்முறையீட்டாளர் வீடு என்று சொல்லும் அந்த அறையில் யாரும் குடியிருக்கவில்லை எனவும், மாட்டுத் தொழுவம் மற்றும் தகரக் கொட்டகை அனைத்தும் அதே நிலையில் தொடர்ந்ததை தபால் மூலம் மேல்முறையீட்டாளருக்கு பதில் அனுப்பப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 கூமாப்பட்டி பிரிவு அலுவலகம் மூலம் அளிக்கப்பட்ட பதில் போதுமானதாக இல்லை எனக் கூறி நுகர்வோர் குறைதீரக்கும் மன்றம், விருதுநகரில் மனு அளித்துள்ளதாகவும், அந்த மனுவின் மீதான விசாரணையின் போது, மேல்முறையீட்டாளர் குடியிருந்து வருவதாகவும் மேல்முறையீட்டாளரின் தோட்டத்தில் கட்டியிருக்கும் அறையானது அங்கு வேலை நடைபெறும் பொழுது சற்று ஒய்வு எடுப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது எனவும், அந்த மின் இணைப்பில் வேறு எந்த வித வணிகப்பயன்பாடும் பயன்படுத்த மாட்டேன் என மேல்முறையீட்டாளர் உத்திரவாதம் கொடுத்ததின் அடிப்படையில் விருதுநகர் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனுவின் (36/2022) ஆணையின்படி, மின் இணைப்பு வணிகப்பயன்பாட்டில் இருந்த போது மேல்முறையீட்டாளர் இதுவரை செலுத்திய மின் கட்டணத்தை திரும்பக் கேரமாட்டேன் எனவும் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் வாய்மொழியாக கூறியிருந்ததாகவும், அதன் அடிப்படையில் வணிகப் பயன்பாட்டிலிருந்து வீட்டு மின் இணைப்பாக மாற்றம் செய்யப்பட்டது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 பார்வை எண் 4 இன் படி இணைப்பு எண் 4ல் தண்டத்தொகை என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அந்த தொகையானது தாங்கள் இதற்கு இடைப்பட்ட காலத்தில் (25.08.2021 முதல் 29.10.2022 வரை) வீதப்பட்டி Vல் இருந்த போது பயன்படுத்திய மின்சாரத்திற்கு வணிகப் பயன்பாட்டிற்கான மின் கட்டணமாக வசூல் செய்யப்பட்டதாக மேலும் வீதப்பட்டி மாற்றத்திற்கான விண்ணப்பக் கட்டணம் செலுத்தியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்வு:</u>**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 இவ்வழக்கை ஒட்டிய கீழ்கண்ட வினாக்கள் எழுகின்றன.

1. மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் பதிவு செய்த காலத்திலேயே வீட்டு உபயோகத்திற்கான மின் இணைப்பு கேட்கப்பட்டதா என்பதை ஆராய விரும்புகிறேன்?

2. மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பிற்கு வீட்டு உபயோக வீதப்பட்டிக்கு பதிலாக வணிக பயன்பாட்டு வீதப்பட்டியில் கூடுதலாக செலுத்திய தொகையையும், வீதப்பட்டி மாறுதலுக்கான தொகையையும் திரும்ப செலுத்துமாறு கோருவது ஏற்புடையதுதானா?

3. மேல்முறையீட்டாளருக்கு நிவாரணம் வழங்க முடியுமா?

8.0 <u>கேள்வி 1–ற்கான தீர்வு</u>:

8.1 மேல்முறையீட்டாளர் விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்ட கொடிக்குளம் கிராமத்தில் பட்டா எண்.3591ன் படி தனக்கு சொந்தமான புல எண்.144/5ல் கட்டியுள்ள குடியிருப்பு வீட்டுக்கு கடந்த 15.8.2021 வீட்டு மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

8.2 அவ்விண்ணப்பத்தின் அடிப்படையில் மேற்கூறிய இடத்தை கள ஆய்வு செய்த பொழுது அந்த இடமானது பிளவக்கல் மெயின் ரோட்டிலிருந்து சுமார் 600 மீட்டர் தொலைவில் காட்டுக்குள் அமைந்துள்ளதாகவும், அந்த இடத்தில் விவசாய கிணறு ஒட்டி சுவர் எழுப்பப்பட்டு மேலும் ஒரு மோட்டர் அறை மாட்டுத்தொழுவம் மற்றும் தகர கொட்டகை (சுமார் 150 சதுர அடி) இருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.3 இந்நிலையில் மேல்முறையீட்டாளருக்கு வீட்டு உபயோக வீதப்பட்டியில் இணைப்பு வழங்குவதாக 25.08.2021 அன்று குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு அன்றே மின்இணைப்பு எண் 07276020375 வழங்கப்பட்டுள்ளது.

8.4 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு வேண்டி சமர்ப்பித்த விண்ணப்பத்தில் பின்வருமாறு மின்பளு கொடுக்கப்பட்டுள்ளது.

| s.No. | Description | No. Of points | Wattage of points | Total wattage |
|---|---|---|---|---|
| 1. | Lights | 5 | 40 | 200 |
| 2. | Fans | 2 | 60 | 120 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | Convenient wall plugs | 5 | 60 | 300 |
| 4. | Other purpose | 1 | 1120 | 1120 |
| | | | Total | 1.74 kw |

8.5 எனவே மேல்முறையீட்டாளர் விண்ணப்ப காலத்திலேயே வீட்டு உபயோக பயன்பாட்டிற்கான மின் இணைப்பிற்கு விண்ணப்பித்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

8.6 இந்நிலையில் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(2)(அ)-ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"29. மின்னிணைப்புத் தொடர்கள்*

*(1)xxxx*

*(2) அ) பண்ணை வீட்டில் வீட்டு பயன்பாட்டுக்காகத் தண்ணீர் ஏற்றவும், வானொலி மற்றும் பிற பயன்பாட்டுக் கருவிகளுக்குப் பயன்படுத்தவும் தனி மின்னிணைப்பு தேவையென, ஒரு வேளாண் மின்னிணைப்போடு கேட்டால், ஒரே புல அளவை எண்ணில் (survey field number) /துணைப்பிரிவு புல எண்ணில் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புக்கள் தரப்படும்."*

8.7 ஆகவே, மின்னிணைப்பு கோரும் மின் நுகர்வோர் கூடுதலாக ஒரு மின்னிணைப்பு வீட்டு உபயோக மின் இணைப்பில் வழங்கப்படலாம் என தெரிய வருகிறது.

**9.0 <u>வழக்கெழு வினா 2-ற்கான தீர்வு:</u>**

9.1 மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட நிலையில் முதல் கணக்கீட்டிற்கான கட்டண தொகை வந்தபோது 100 யூனிட்டிற்கும் குறைவான மின்சார பயன்பாட்டிற்கு ரூ.550/- மின் கட்டணம் செலுத்த தகவல் வந்ததாகவும், அதன் அடிப்படையில் பிரிவு அலுவலகத்தில் விசாரித்ததில் மேற்படி மின் இணைப்பு வணிக பயன்பாட்டிலான மின் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளருக்கு தெரியவந்துள்ளது.

9.2 இது குறித்து எதிர்மனுதாரரிடம் வினவியபோது மனுதாரரின் இடத்தை களஆய்வு செய்த போது அவருக்கு சொந்தமான தோப்பில் குடோன் போன்று ஒரே ஒரு அறை இருந்ததாகவும், அதன் அருகில் சில மாடுகள் கட்டப்பட்டிருந்ததாகவும், மேலும்

மனுதாரர் அங்கு குடியிருக்கவில்லை என்ற காரணத்தினால் வணிக பயன்பாட்டில் மின் இணைப்பு வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.3 மேல்முறையீட்டாளர் தான் வெளியூரில் வசிப்பதாகவும், தோட்ட வேலை காரணமாக செல்லும் போது தங்குவதற்காகவே தோடத்தில் ஒரு அறை மட்டும் கொண்ட வீடு கட்டியுள்ளதாகவும், மாடுகள் கட்டியிருக்கும் இடத்தில் எந்தவிதமான மின் உபயோகமும் இல்லை எனவும், நடுகாட்டில் உள்ள தனது தோட்டத்தில் எந்தவிதமான வணிக பயன்பாடு இல்லை எனவும், எனவே தனது தோட்டத்தில் உள்ள வீட்டிற்கான மின் இணைப்பை வணிக பயன்பாட்டிலிருந்து வீட்டு உபயோகத்திற்கான மின் இணைப்பாக மாற்றி தருமாறு எதிர்மனுதாரரிடம் கோரியுள்ளார்.

9.4 விருதுநகர் மின்பகிர்மான வட்டம்/மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய ஆணையில் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரிய இடத்தில் வணிக உபயோகத்திற்கான சாத்திய கூறுகள் இல்லை என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், TNERC Distribution Code Section 29(2)ன்படி "Agriculture connections, where the consumer requires a separate service connection for utilizing energy for radios and other appliances including domestic lightning in the farm house, more than one service connection in the same survey field number/sub divided survey field number will be permitted" என தெரிவித்துள்ளதால், மனுதாரரின் தோட்டத்தில் கட்டியுள்ள வீட்டிற்கு புதிய மின் இணைப்பு வழங்கலாம் என்பதும், Tariff Order No. 07 of 2022 ன்படி T.P. No.1 of 2022 dt. 09.09.2022 ன் Section 6.2.2 ன் படியும், மனுதாரருக்கு வீட்டு உபயோக வீதப்பட்டியில் மின் இணைப்பு வழங்கலாம் என்று தீர்வு செய்ததை தொடர்ந்து மேல்முறையீட்டாளரிடம் வீதப்பட்டி மாற்றத்திற்கான விண்ணப்பம் மற்றும் உரிய தொகையினை பெற்று 19.10.2022 அன்று மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு வணிக பயன்பாட்டு வீதப்பட்டியிலிருந்து வீட்டு உபயோக மின் இணைப்பாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

9.5 மேல்முறையீட்டாளர் வீட்டு உபயோக மின் இணைப்பு வேண்டி உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து 15.08.2021 அன்று விண்ணப்பித்த நிலையில் அவருக்கு 25.08.2021 அன்று வணிக பயன்பாட்டிற்கான வீதப்பட்டியில் மின் இணைப்பு வழங்கப்பட்டு 19.10.2022 அன்று வீட்டு உபயோக மின் இணைப்பாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பிற்கு

வீட்டு உபயோக வீதப்பட்டிக்கு பதிலாக வணிக பயன்பாட்டிற்கான வீதப்பட்டியில் கட்டணம் வசூல் செய்யப்பட்டது உறுதியாகிறது.

9.6 எனவே, உரிய வீதப்பட்டியில் கட்டணம் வசூல் செய்யாமல் வணிக பயன்பாட்டு வீதப்பட்டியில் வசூல் செய்த தொகையை திரும்ப வழங்குமாறு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**10.0 <u>வழக்கெழு வினா 3-ற்கான தீர்வு:</u>**

10.1 மேல்முறையீட்டாளர் அலைச்சல், மனஉளைச்சல் மற்றும் தபால் செலவு ஏற்படுத்திய காரணங்களுக்காக ரூபாய் 10,000/- தண்டத் தொகையாக வழங்கவேண்டும் என கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"7. ......................*

*..............................*

*(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

**10.2** மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது.

**10.3** மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது. ஆகவே மன உளைச்சலுக்காக நீவாரணம் எழுப்பும் கோரிக்கை பொருந்தாது என தெரியப்படுப்படுகின்றது.

## 11.0 பகுப்பாய்வு:

11.1 மேல்முறையீட்டாளர் விருதுநகர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு அளித்த மனுவில் தன்னுடைய வீட்டிற்கு வீதப்பட்டி மாற்றம் மற்றும் அதிகப்படியாக செலுத்திய தொகையை திரும்ப வழங்குமாறும் இரண்டு கோரிக்கைகள் வைத்த நிலையில் மன்றம் தன்னுடைய தீர்வில் வீதப்பட்டி மாற்றம் வேண்டிய கோரிக்கைக்கு மட்டும் தீர்வு கண்டுள்ளது. அதிகப்படியாக செலுத்திய தொகையை திரும்ப வழங்குமாறு கோரிய கோரிக்கை மன்றத்தால் விவாதிக்கப்படாமல் விடுப்பட்டுள்ளது. எனவே, இனிவரும் காலங்களில் நுகர்வோரின் அனைத்து கோரிக்கைகளுக்கும் தீர்வு கண்டு ஆணை வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

## 12.0 முடிவுரை:

12.1 மேற்கூறிய 8, 9 மற்றும் 10 ஆகிய பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி, மேல்முறையீட்டாளர் கோரியுள்ளபடி தன்னுடைய வீட்டிற்கு வீட்டு உபயோக வீதப்பட்டிக்கு பதிலாக வணிக பயன்பாட்டிற்கான வீதப்பட்டியில் அதிகப்படியாக செலுத்திய தொகையையும் வீதப்பட்டி மாற்றத்திற்கான பதிவுக் கட்டணம், ஆய்வுக் கட்டணம் ஆகிய அனைத்தையும் மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு ஆணையிடுகிறேன்.

12.2 மேற்கண்ட ஆணையை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை இந்த ஆணை நிறைவேற்றப்பட்ட 15 நாட்களுக்குள் எதிர்மனுதாரர் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

12.3 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு என் 98/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

பெறுநர்

1. திரு மா.த.கேசவன், – By RPAD
5/1/3, எப்.எப். ரோடு, விருதுநகர் – 626 001.

2. உதவி மின்பொறியாளர்/ /கூமாபட்டி ,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கூமாபட்டி.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
65/1, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் – 626 001.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.